**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 27/2022 LW- 5 PW-5

| | |
|---|---|
| Name | இருசப்பன் |
| Husband/Father Name | லட்சுமணன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | சிறப்பு உதவி ஆய்வாளர், நெடுஞ்சாலை ரோந்து பிரிவு |
| Age | 54 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 17.02.2026 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிகள் 1,2 ஆஜர். )**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராணிப்பேட்டை நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு உதவி ஆய்வளராக பணி செய்து வருகிறேன். கடந்த 09.03.2022 அன்று 14.30 மணியளவில் ராணிப்பேட்டை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலையம் பொறுப்பில் இருந்த போது பூமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.126/2022 இ.த.சா. பிரிவுகள் **294(b), 323, 355** ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு அதே நாள் 15.30 மணியளவில் சம்பவ இடம் சென்று அங்கு காணப்பட்ட சாட்சிகளான குமார் மற்றும் சங்கர் ஆகியோரிகள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.5 மற்றும் 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே நாள் 16.35 மணியளவில் அம்மூர் ஆலமரம் பேருந்து நிறுத்தம் அருகே மேற்குறிப்பிட்ட அதே சாட்சிகள் முன்பு வழக்கு சொத்தான வீடியோ குறுந்தகடு ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.7** ஆகவும் குறுந்தகடு அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு இவ்வழக்கின் சாட்சிகளான பூமணி, வளர்மதி, குமார் மற்றும் சங்கர் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அதே நாள் 17.30 மணியளவில் அம்மூர் ஆலமரம் பேருந்து நிறுத்தம் அருகே இவ்வழக்கின் எதிரியான பாண்டியன் என்பவரை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்பு நான் பணி மாறுதலாகி சென்றதால் இவ்வழக்கின் கோப்புகளை உதவி ஆய்வாளர் திரு.அண்ணமாலையின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2026.02.18 12:41:26 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.